# துணுக்காய் பிரதேசசபை
# முல்லைத்தீவு மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 யூன் 25 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 04 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்ரோபர் 07 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது கணக்காய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய துணுக்காய் பிரதேசசபை 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகள் பேணி வருவருவதுடன் தவிசாளருக்கு என்னால் வழங்கப்பட்ட அறிக்கையில் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை தவிர கணக்கீட்டு நியமங்களின்படி துணுக்காய் பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள், வருமானங்கள் மற்றும செலவினங்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம | சொத்துக்கள் | | வருமானங்கள் | | செலவினங்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங் களின் எண்ணிக் கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங் களின் எண்ணிக கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங் களின் எண்ணிக கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | | | 01 | 405,900 | | - |
| அதிகரித்துக் கூறல்கள் | | | - | - | 01 | 36,000 |
| வகைப்படுத்தல் வழு | 01 | 80,000 | - | - | | |

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

**கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 3,075,993 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 601 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவிலும் கூடிய வருமானமாக ரூபா.2,801,289 விளைந்திருந்தது.

## 2.2 நிதிசார் கட்டுப்பாடு

i. பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 1,704,630 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 459,458 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 5 | - | - |
| குத்தகை வாடகைகள் | 3,667 | 4,009 | 135 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 724 | 142 | |
| வேறு வருமானங்கள் | 6,965 | 5,506 | |

### 2.3.2 வருமான முகாமைத்துவம்

(i) மீளாய்வாண்டிலும் முன்னைய காலங்களிலும் ரூபா 116,500 பெறுமதியான நிலவாடகை நிலுவையினை அறவிடுவதற்கு சபை ஆக்கபூர்வமான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பிரதேசங்களில் 41 எண்ணிக்கையான முச்சக்கரவண்டி உரிமையர்களிட மிருந்து ரூபா 17,400 பெறுமதியான முச்சக்கரவண்டி உரிமக் கட்டண அறவீடு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 நீதிமன்ற தண்டப்பணங்களும் குற்றப்பணங்களும்

(i) வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதவான் நீதிமன்றத்திலிருந்து மீளாய்வாண்டில் பெறப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண பட்டியல் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011ம் ஆண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பணங்களும் குற்றப்பணங்களும் ரூபா 4,025,650 பெறுமதியானவை வருமானமாகவும் வருமதியாகவும் சிட்டையிடப்பட்டதேயன்றி அறிக்கையிடும் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.4.1 கையிருப்பு மீதி

பன்னிரெண்டு விடயங்களது மீதியானது நேரடி சரி, பிழை பார்த்தல் கணிப்பின்றி புத்தகப் பெறுமதியின் அடிப்படையில் அமைந்திருந்தது.

### 2.4.2 முற்பணக் கணக்கு

(அ) மீளாய்வாண்டில் சபையின் செயலாளரினால் பெறப்பட்ட முற்பணம் ரூபா 132,292 அறிக்கையிடும் திகதி வரையும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதி 371 ன் 2வது பிரிவின் பிரகாரம் முற்பணங்கள் வழங்கப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டவுடனேயே முற்பணங்கள் தீர்வு செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டபோதும் சபையின் அலுவலரொருவருக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் உரிய காலப்பகுதியில் மீளளிக்கப்படாது காலம் தாழ்த்தி மீளளிக்கப்பட்டமையால் ரூபா 41,674 பெறுமதியான அரச பணம் குறிப்பிடத்தக்க அலுவலரிடமிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

### 2.4.3 பதவியினர் கடன்

சபையிலிருந்து கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக இளைப்பாறிய அலுவலரொருவரிடமிருந்து அறவிட வேண்டிய பதவியினர் கடன் நிலுவை ரூபா 76,870 ஆனது ஓய்வூதிய நன்கொடைப் பணத்திலிருந்து கழிக்கப்படாது ஓய்வூதியம் வழங்கப்பட்டுளன்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

### 2.5 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள் விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனானதொடர்பு | விபரம் |
|---|---|---|
| (அ) | 1988ம் ஆண்டின் நிதிநிர்வாக ஒழுங்கு விதி | |
| (i) | அத்தியாயம் II பிரிவு 5 | காசு, களஞ்சியம் என்பவற்றுடன் தொடர்புடைய அலுவலர்களிடம் பிணைப்பணம் பெற்றுக் கொள்ளாமை |
| (ii) | அத்தியாயம் II பிரிவு 14 | மேலதிக வாக்குப் பணத்திலிருந்து செலவினத்திற்கு தேவையான தொகையை பெற உரிய காலத்தில் தீர்மானம் நிறைவேற்றத் தவறியமை. |
| (iii) | அத்தியாயம் III பிரிவு 29 | மொத்த சேகரிப்புகள் நாள்தோறும் வங்கியில் வைப்பு செய்யப்படாமை |
| (iv) | அத்தியாயம் III பிரிவு 59, 60 | வியாபார வரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படவில்லை |

| | | |
|---|---|---|
| (v) | அத்தியாயம் III பிரிவு 65 | அரசிறை எழுதுநர் வியாபார உரிமம் சம்பந்தமாக அரசிறை எழுதுநர் தவறுநர் நிரல் தயாரித்து செயலாளரிடம் ஒப்படைக்கவில்லை |
| (vi) | அத்தியாயம் III பிரிவு 66 | செயலாளர் 1987 ம் ஆண்டின் 15 ம் இலக்க பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் பின் 150(4) ம் பிரிவின் கீழ் ரூபா 5,010,631 நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கவில்லை |
| (vii) | அத்தியாயம் IV பிரிவு 97 | நிகழ்ச்சி குறியீடுகள் செலவின விடயங்கள் என்பன வாக்குப் பணங்களை கொடுப்பனவு செய்வதற்கும் எல்லா உறுதிச்சீட்டுகளிலும் வரவு செலவு திட்டத்தில் தோற்றமளிக்கும் அதே முறையில் காட்டப்படவில்லை. |
| (ஆ) | <u>நிதி ஒழுங்கு விதி</u><br>இலக்கம் 571 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 161,500 பெறுமதியுடைய வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002ம் ஆண்டின் 14ம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம் | சபையினால் அறவிடப்பட்ட ரூபா 270,329 பெறுமதியான பெறுமதி சோர்வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப் பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | வழங்கல் கைநூல் பிற்சேர்க்கை 19இன் 9.3.1ம் பிரிவு | வாகனத் திருத்தங்கள் ரூபா 246,902 தொடர்பில் அமைச்சு செயலாளரின் அனுமதி பெறப் பட்டிருக்கவில்லை. |

**2.6 ஒப்பந்த நிர்வாகம்**

**2.6.1 வேலைகள் நிறைவேற்றவதில் காலதாமதம்**

கொல்கள அமைப்பு வேலைகள் ரூபா 198.655 பெறுமதியானவை மீளாய்வாண்டில் நிறைவேற்றப்படாமை அப்பிரதேச மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் உரிய காலத்தில் கிடைக்கப் பெறாமை அவதானிக்கப்பட்டது

**2.7 செயற்பாடு மற்றும் முகாமைத்துவ பலவீனம்**

(அ) சபையின் வாகனங்களின் திருத்தம் தொடர்பான மதிப்பீடு, கூறுவிலை மற்றும் வேலை நிறைவேற்று அறிக்கை சமர்ப்பிக்காது ரூபா 422,892. செலவினங்கள் சபை நிதியில் செலுத்தியமை முகாமை, சபை செயற்பாடுகளில் கூடிய கவனம் செலுத்தாமையினை எடுத்துக் காட்டுகின்றது.

(ஆ) சபையினால் கொல்கள கட்டிட அமைப்பிற்காக சில்லறைக் கடனாளிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 198,655 மீளாய்வாண்டு இறுதிவரை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. வருமான சேகரிப்பு
ii. முற்பணங்கள்
iii. கணக்கீடு
iv. வரவு செலவுத் திட்டம்
v. கணிப்பீட்டு சபை அறிக்கை
vi. சில்லறைக் கடன் வழங்குனர்
vii. வாகன பயன்பாடு
viii. கேள்விச் சபை தீர்மானம்